# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 13 புதன்கிழமை 30.10.2024 கதிர் 402



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## பருத்தித்துறையில்

# இரட்டைக் கொலை!

## கணவன், மனைவி இருவரும் சடலங்களாக மீட்பு

**யாழ்ப்பாணம் – பருத்தித் தித்துறை, கோவளம்–புனிதநகர் பகுதியில் கணவன், மனைவி ஆகிய இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.**

**அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் சுப்பிரமணியம், சுப்பிரமணியம் மேரி றீட்டா ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இன்று புதன்கிழமை காலை அவர்களின் வீட்டுக்குச் சென்ற உறவினர்கள் இருவரும் உயிரிழந்த நிலையில் இருப்பதைக் கண்டுள்ளனர்.**

2➤



## ஜோன்ஸ்டனுக்கு பிணை!



பதிவு செய்யப்படாத பி.எம். டபிள்யூ ரக வாகனத்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் 5 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான ஐந்து சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிணை வழங்குகின்றவர்களில் இரண்டு பேர் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் நெருங்கிய உறவினர்களாக இருக்க வேண்டும் என்பதோடு, ஜோன்ஸ்டன் பெரனாண்டோ விசாரணைகளுக்கு எந்த விதத்திலும் குறுக்கீடு செய்யும் வகையில் அழுத்தங்களைக் கொடுக்கக் கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

(ஐ-05)

## அமைச்சர்கள் பயன்படுத்திய வீடுகளுக்கு இலட்சக் கணக்கில் நீர்க்கட்டண நிலுவை!

### கணக்காய்வு அறிக்கையில் அம்பலம்

கொழும்பு, அக். 30

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வீடுகளுக்கு வழங்கப்பட்டிருந்தநீர் விநியோக இணைப்புகளுக்காக சுமார் 50 இலட்சம் ஷரூபாவைச் செலுத்தத் தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கட்டணம் செலுத்தத் தவறிய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவற்றை வசூலிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு கணக்காய்வு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட குடியிருப்புகளில்

நிலுவையாகக் காணப்படும் தொகையை பொது வாடிக்கையாளர்கள் என்ற வகுதியின் கீழ் பெற்றுக் கொள்வதாகவும், நிலுவைத் தொகையை செலுத்தத் தவறும் இடங்களில் நீர் வழங்கலை நிறுத்துமாறு தாம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

(ஐ-05)

## கிளிநொச்சியில் கவன ஈர்ப்பு!

*கிளிநொச்சி, அக். 30*

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இன்று கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் படங்களையும், பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள், தமது உறவுகளுக்கு நீதி வேண்டிக் கோசங்களையும் எழுப்பினர்.

(இ)

## உயர்தரப் பரீட்சைத் திகதியில் மாற்றமில்லை பரீட்சைகள் ஆணையாளர் திட்டவட்டம்!

கொழும்பு, அக். 30

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிடப்பட்டபடி நடைபெறும் என்றும், எந்தக் காரணங்களுக்காகவும் பரீட்சை பிற்போடப்பட மாட்டாது எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். பரீட்சைகள் திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்த கொண்ட அவர், 2024ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிடப்பட்டபடி எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகி, டிசம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும் எனக் குறிப்பிட்டுள்ளார். உயர்தரப் பரீட்சை தொடர்பில் பரப்பப்படும் போலி தகவல்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும், தவறான செய்திகளை நம்பி ஏமாற்றமடைய வேண்டாம் எனவும் அவர் பரீட்சார்த்திகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படும் பரீட்சைக்கான நேர அட்டவணையை மாத்திரம் பின்பற்றுமாறும், பரீட்சைகள் திணைக்களத்தினால் உத்தியோகப்பூர்வமாக வெளியிடப்படும் தகவல்கள் தவிர்ந்த ஏனைய சமூக வலைத்தளங்களில் பரப்படும் தகவல்களை நம்ப வேண்டாம் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கோரியுள்ளார்.

(ஐ-12)

## இரட்டைக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவர்கள் 50,51 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலீஸார் மற்றும் பொலீஸ் தடயவியல் நிபுணர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலீஸாரால் பருத்தித்துறை நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கிறீட் கல்லினால் தலையில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப படுகிறது. பருத்தித்துறைப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-05)

# காதலியைக் கல்லால் அடித்துக் கொன்ற காதலன்!

களுத்துறை, அக் 30

வாக்குவாதம் முற்றியதனால் தனது காதலியைக் கல்லால் தாக்கிக் கொலை செய்த சம்பவமொன்று களுத்துறை, பயகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. சந்தேக நபர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர் பஹலகொட பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதான யுவதி என்றும், கைது செய்யப்பட்டவர் 18 வயதுடைய இளைஞர் என்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, பயாகல. தியலகொட கடற்கரைக்கு வந்திருந்தபோது தமக்கிடையில் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், வாக்குவாதம் முற்றிய நிலையில் தான் கல்லால் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார். சம்பவம் இடத்தில் இருந்து தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கல் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருவருக்கும் இடையில் நீண்ட காலமாக அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளதாக மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து, சந்தேகநபர் தனது நண்பருக்கு அறிவித்ததையடுத்து, இருவருமாகக் காயமடைந்த நிலையிலிருந்த காதலியை அம்புலன்சில் ஏற்றி களுத்துறை நாகொட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் காதலி உயிரிழந்துள்ளார். கைது செய்யப்பட்டவரை களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பொலீஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஜ-20)



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அமைந்துள்ள மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி இன்று காலை ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ் மறைக்கல்வி நடுவு நிலையத்தின் இயக்குநர் அருட்பணி. வின்சன் அடிகளாரதும் , யாழ். அகவொளி நிறுவனத்தின் உதவி இயக்குநர் அருட்பணி .எம். அன்ரன் ஜெரால்ட் அடிகளாரதும் பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.



# மதுசாலை அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தி வழங்கப்பட்ட கடிதத்துக்கு இடைக்காலத் தடை!

கொழும்பு, அக்.30


மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபான சாலை ஒன்றை நடத்துவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தி மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் இடைநிறுத்தக் கடிதம் வழங்கப்பட்ட மதுபானசாலையின் உரிமையாளரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் மகேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய ஆயத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள மதுவரி ஆணையாளர் நாயகம், மன்னார் பிரதேச செயலாளர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பாணை விடுப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி மீண்டும் விசாரணைக்காகத் திகதி குறிக்கப்பட்டுள்ளது. (இ-12)

# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் பாரியளவு முறைப்பாடுகள்



கொழும்பு, அக்.30

ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு நாள்தோறும் பெரும்எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக குழுவுக்கு நாள்தோறும் சுமார் 500 முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக கூறப்படுகிறது

இவ்வாறு கிடைக்கப பெறும் முறைப்பாடுகளில் பாரியளவு ஊழல் மோசடிகள் தொடர்பான பல்வேறு சம்பவங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசாரணை நடத்துவதற்கான பூரண அதிகாரங்களையும் சுயாதீனத தன்மையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவொரு காரணத்திற்காகவும் எந்தவொரு ஊழல் மோசடி செயல்களையும் மூடிமறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது என கூறப்படுகிறது

கடந்த காலங்களில் விசாரணை செய்யப்படாத மற்றும் இடைநடுவில் நிறுத்தப்பட்ட விசாரணைகள், இந்த புதிய விசாரணை ஆணைக்குழுவினால் விரிவான முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளதாகத் தெரவிக்கப்படுகின்றது. (ஐ)






# மிதி வெடி

"அழகானதொரு ஆற்றங்கரையோரம். அருகிலொரு தென்னந்தோப்பு. தென்னை மரமொன்றில் அழகிய பசு மாடு கயிற்றினால் கட்டப்பட்ட படி, புற்றரையில் மேய்ந்து கொண்டிருக்கிறது. ஆற்றங்கரையின் மறு புறத்தில் மலையடிவாரம். சூரியன் மறைந்து கொண்டிருக்கிறது. மேலே சொல்லப்பட்டுள்ள விபரிப்பின் அடிப்படையில் அழகான அந்த மாலைப்பொழுது என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக? உங்கள் பதிலில் இரம்மியமான இயற்கையின் அம்சங்களைக் குறிப்பிடுக, ஆற்றங்கரையோரம், தென்னந்தோப்பு, எழில் மிகு சூரிய அஸ்தமனம் என்பன உங்கள் பதிலில் கட்டாயமாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்."

இப்பிடியொரு கேள்வியக் கேட்டால், "ஆற்றங்கரையில் மாடு கட்டப்பட்டிருந்தது. மாட்டின் நிறம் வெள்ளை. மாட்டுக்கு நான்கு கால்கள் மாட்டின் கழுத்தில் சதங்கை பூட்டிய சங்கிலி ஒன்று காணப்படுகிறது" எண்டு கேட்ட கேள்விக்கும் பதிலுக்கும் சம்மந்தம் இருக்கு ஆனா இல்லை எண்டுமாப் போல பதில் எழுதினா எப்பிடி இருக்கும் பாருங்கோ. ?

கேட்டால் சொல்லுவினம் ஆற்றங்கரையில மாடு கட்டுப்பட்டுத் தானே இருக்குது எண்டு. மாட்டைப் பற்றி கட்டுரையில எழுதத்தானே வேணும்? எண்டுவினம்.

உந்தப் பதிலப் போல தான் இலங்கை மின்சார சபையிட்ட கேட்ட கேள்வியளுக்குப் பதில் குடுத்திருக்கினமாம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்குக் கீழ, வடக்கில குடுக்கப்பட்ட "சோலர்" அனுமதிகள் தொடர்பா ஒண்டுக்கு மூண்டு பேர் ஒரே மாதிரிக் கேள்வியளைச் சுத்திச் சுழட்டிக் கேட்டிருக்கினம்.

"ஏலுமெண்டாப் பண்ணிப்பாரன்" எண்டுறது கணக்கா தகவல் அறியும் சட்டத்துக்கு அமைய குடுக்கப்பட்ட கால எல்லைக்குள்ள ஒரு விவரமும் குடுக்கேல்ல. குறித்தொதுக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்தும் பலன் இல்லை. யாழ்ப்பாண "என்ஜினியர்" ஒண்டும் தாரார் இல்லை எண்டு பதில் வர, "கேஸ்" இப்ப ஆணைக்குழுவில விசாரணைக்கு வருகுது.

"சோலர்" அனுமதிக்கு விண்ணப்பிச்ச ஆக்களிண்ட பெயர், விண்ணப்பிச்ச திகதி, காசு கட்டின திகதி, காசு கட்டின சிட்டை இலக்கம், அனுமதி குடுக்கப்பட்ட திகதி.. எண்டு கன கேள்வியள். அவ்வளவு விவரமும் நேர்மையா இருந்திருந்தா கேட்ட உடனயே குடுத்திருப்பினம் எல்லோ?

அதெப்பிடி குடுக்க ஏலும் "கே.ஏ" அனுப்புற "அப்பிளிக்கேசன்" எல்லாத்துக்கும் அவசர, அவசரமாய் "அப்புறூவல்" குடுத்து, இருபது, இருபதாய் அறுபதைத் தன்ர வீட்டுக்கு "ஓசி"யில பூட்டுவிச்சவர் - விண்ணப்பிச்ச "ஓடர்"ல தான் பொது சனத்துக்குக் குடுத்தவர் எண்டு எப்பிடிப் "புறூவ்" பண்ணுவார்?

காசு கட்டின ஒழுங்கும், "கிளியரன்ஸ்" குடுத்த ஒழுங்கும் ஒரு காலத்திலையும் பொருந்தாதாம். ஆனா "ஆர்.ரி.ஐ" ஆணைக்குழு வரை "கேஸ்" போனதால கடுப்பான தலைமை அலுவலகம் குடுத்த குடைச்சலில எட்டாம் திகதிக்கு முன்னம் ஏதோ பதிலை அனுப்ப வேணும் எண்டதுக்காக "அழகிய இயற்கையை" எழுதச் சொல்ல "கட்டியிருக்கிற மாட்டைப்" பற்றி கதை விட்டிருக்கினம்.

பெயர், விலாசம், திகதி முதல் கொண்டு விலாவாரியா விவரம் கேட்டதுக்கு உவை என்னெண்டா எத்தினை "கிலோவோட்" எப்ப குடுத்தனாங்கள், எத்தின பேருக்குக் குடுத்தனாங்கள் எண்டு நம்பரில பதில் அனுப்பியிருக்கினமாம். இதுக்குள்ள நம்பரில குடுத்த விவரங்கள் ஏதும் தேவையெண்டா நேரில வாங்கோ தாறம் எண்டு வேற சொல்லியிருக்கினமாம்.

ஏற்கனவே இந்த விசியம் "பவர் மினிஸ்ரர்" வரைப் போய் "பொஸிற்றிவ்"ஆ "மூவ்" பண்ணுறபடியால விசியம் இன்னும் இறுக்கமாத் தான் போகப் போகுது போல.

வேற ஒண்டும் தேவையில்ல. இதுவரை காலமும் குடுத்த "கிளியரன்ஸ்" எல்லாத்துக்குமான "அக்ரிமென்ற்" ஆரோட செய்திருக்கெண்டு பாத்தாலே கவ்வியங்காட்டு விவகாரம் தானா வெளியால வருமெண்டுறது ஈறா "பவர் மினிஸ்ரர் கும் கிஸ் எக்சலன்ஸி" வரை ஆதாரங்களோட அனுப்பப் பட்டிருக்குதாம்.

முன்னைய அரசாங்கம் போல இல்லாமல் இவையாவது இது பற்றி நேர்மையா விசாரிப்பினம் எண்டு சனங்களும் நம்புது. அந்தப் பெடியளும் விடுற மாதிரித் தெரியேல்ல.

எனக்கென்னவோ ஒரு பாட்டு மட்டும் தான் ஞாபகம் வருகுது.

ஐயனே,
உமது திருவடிகளுக்கே ஆயிரந்தரந் தோத்திரம் !
மெய்யனே,
உமது தயைகளை அடியேன் விவரிக்க எம்மாத்திரம்?
இதுக்கு மேலயும் நான் விவரிக்கத் தான் வேணுமோ?

–நரமுனி–



# நாடாளுமன்றத் தேர்தல் 2024

## எனது வீட்டை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத பொலீஸார் !

### வேட்பாளர் சசிகலா ஆதங்கம்




திருநெல்வேலி, அக்.30

எனது வீட்டின் மீது தாக்குதல் நடத்தி, என்னுடைய வீட்டுக்கு பொறிக்கப்பட்டிருந்த என்னுடைய கணவரின் பெயர் மீது மை பூசி அதனை அழித்து அநியாயம் செய்தவர்கள் பற்றிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என ‘சங்கு’ சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் விசனம் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“கடந்த 3 நாட்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சி வேட்பாளரின் ஆதரவாளர் என்று கருதப்படும் பெண் ஒருவரால் என்னுடைய வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீட்டின் கண்ணாடிகள் நொருங்கின.

அதேவேளை, வீட்டு வாசல் தூணில் என்னுடைய கணவர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அதன் மீது மை பூசி அழிக்கப்பட்டது.

அதேவேளை, எமது மதில் சுவர்களில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்ட போதிலும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

என்னுடைய கணவர் ஜனநாயக ரீதியில் தேர்தலை எதிர்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டுக்கொண்டிருந்த போதே தென்னிலங்கையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இன்றுவரை அவரை கொலை செய்தவர்களையோ அதற்கு காரணமானவர்களையோ நீதியின் முன் நிறுத்தவில்லை - தண்டிக்கவில்லை. இந்த நாட்டில் அநீதிகளுக்கு முடிவில்லையா?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

## வரிச்சுமையைக் குறைக்க வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச வேண்டும்!

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு, அக். 30

நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின், வரிச்சுமையைக் குறைக்கப்பட வேண்டுமாயின், கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தெமட்டகொட பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது எமது நாடு மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் நாட்டு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை: எதையும் அவர் நிறைவேற்றவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைக்குப்பின், வரி குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. வரிச்சுமை குறையும் என நாடு காத்திருந்தது. ஆனால் அது நடக்கவில்லை.

வற் உள்ளிட்ட நேரடி மற்றும் மறைமுக வரிகளைக் குறைக்க முடியாது போயுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த மீளாய்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின், வரிச்சுமையைக் குறைக்கப்பட வேண்டுமாயின், கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்” என்றார்

(இ)




'எமது மக்களுக்கான எனது பணி மேலும் உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
எங்கள் சின்னம்
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை 'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை 'வெற்றி' எனும் 3 எழுத்தை அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு, பொருளாதார அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557






எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலகத்தில் 8.30 மணியளவில் ஆரம்பமானது. *(படங்கள் : ஹஸ்பர் ஏ.எச்)*

# நாடெங்கிலும் சுமூகமான முறையில் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பம்!



கொழும்பு, அக் 30

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் இன்று காலை ஆரம்பமாகியுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் சுமூகமான முறையில் வாக்களிப்பு இடம்பெற்று வருவதாக எமது செய்தியாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

பொலீஸார் மற்றும் முப்படைகளைச் சேர்ந்தோரும் வாக்களிப்பதற்கு வசதியாக இன்றைய நாள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஏனையவர்கள் எதிர்வரும் முதலாம் மற்றும் நான்காம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நாள்களில் வாக்களிக்கத் தவறிய தபால் மூல வாக்காளர்கள் எதிர்வரும் ஏழாம், எட்டாம் திகதிகளில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுமென தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-12,113)



# யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் தமிழியல் நூலகப்பிரிவு திறப்பு!










யாழ்ப்பாணம், அக் 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழியலுக்கென்று தனிப் நூலகப் பிரிவொன்று நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைத் தமிழியல் சேகரிப்புகளை எண்ணிமப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்றிட்டத்தின் கீழ், எண்ணிம ஆவணக்காப்பகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படக் கூடிய தமிழியல் சார்ந்த தொகுப்புக்களைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும், தமிழியல் மாணவர்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி முதலான அறிவுசார் செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலமைந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நன்கொடையாளர் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் நிதியத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் தமிழியல் நூலகப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்நூலகப் பிரிவைத் திறந்து வைத்தார். நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# சுயதொழில் முயற்சியாளர்களின் கண்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பம்!



கிளிநொச்சி, அக். 30

தீபாவளியை முன்னிட்டு கிளிநொச்சி சௌபாக்கியா உற்பத்தி கிராம சுயதொழில் முயற்சியாளர்களுக்கான விற்பனை கண்காட்சி இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனை கண்காட்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் ஆரம்பமாகியுள்ளது.


கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எஸ். சோதி விஜய தாசன், மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ச.சசீபன், கண்டாவளை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.கஜஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், துறை சார் திணைக்கள அதிகாரிகள், சுயதொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-113)




## அழகுசாதன பொருட்களை வாங்கும்போது கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தல்



கொழும்பு, அக்.30

இலங்கையில் அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்துபவர்களுக்கு நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி உரிய தரத்திலான அழகு சாதனப் பொருட்களை மாத்திரம் பயண் படுத்துமாறு அறிவு றுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அழகுசாதனப் பொருட்களை விற்கும் கடைகளில் விற்பனை செய்யப்படும் பல்வேறு அழகுசாதனப் பொருட்களை வாங்கும் போது கவனமாக இருக்குமாறு நுகர்வோர் அதிகாரசபை பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த அழகுசாதனப் பொருட்களில் பெரும்பாலா னவை தரமற்றதாகவும் பெரும்பாலும் தோலுக்கு தீங்கு விளைவிப்பதாகவும் அதிகார சபை சுட்டிக்காட்டி யுள்ளது.

இவ்வாறான தரமற்ற அழகுசாதனப் பொருட்களி னால் தோல் சேதமடையக் கூடும் என நுகர்வோர் அதிகாரசபையின் சோதனைப் பிரிவின் பணிப்பாளர் சஞ்சய் இராசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2024இல் வெளியிடப்பெற்றது.